

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் மதுரையில், திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினருமான இ.பெ.செந்தில்குமார், தனது பிறந்த நாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



காலில் ஏற்பட்ட காயம் காரணமாக ஓய்வில் இருக்கும் முன்னாள் முதலமைச்சர் போடி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் ஓ. பன்னீர்செல்வம் அவர்களை, கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சந்தித்து, நலம் விசாரித்தார். மேலும், அவர் விரைவில் குணமடைந்து இயக்கப் பணியாற்ற, தனது அன்பையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டார்.

# தமிழகம் முழுவதும் தி.மு.க. மகளிர் அணியினர் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## முதல் பக்கத் தொடர்ச்சி

6. திருவாரூர் - **தமிழரசி ரவிக்குமார், அஞ்சுகம் பூபதி**
7. மதுரை - **பவானி ராஜேந்திரன், வழக்கறிஞர் ஷாமிலி பிரபா,**
8. சென்னை தெற்கு - **விஜயா தாயன்பன், டாக்டர் கனிமொழி சோமு, ராணி ரவிச்சந்திரன், ரத்னா லோகேஷ்வரன், டாக்டர் யாழினி P.M**
9. காஞ்சிபுரம் - **பிரியா ராஜன், நிவேதா ஜெசிகா**
10. நாகப்பட்டினம் - **ஆண்டாள் பிரியதர்ஷினி**
11. தேனி - **திவ்யா சத்யராஜ்**
12. திருச்சிராப்பள்ளி - **விஜிலா சத்யானந்த், கவிதா**
13. கள்ளக்குறிச்சி - **ரேகா பிரிய தர்ஷினி, டாக்டர் மலர்விழி,**
14. செங்கல்பட்டு - **சேலம் சுஜாதா**
15. கடலூர் - **அங்கையற்கண்ணி**
16. தஞ்சாவூர் - **காரல் மார்க்ஸ், அனிச்சம் கனிமொழி**
17. கிருஷ்ணகிரி - **சுஜாதா, ஸ்ரீலேகா**
18. அரியலூர் - **A.ரியா**
19. ஈரோடு - **நாக நந்தினி, கலைசெல்வி**
20. இராணிப்பேட்டை - **அமுலு விஜயன்**
21. கரூர் - **நிரஞ்சனா செந்தில்குமார், கவிதா கல்யாண சுந்தரம்**
22. திருப்பத்தூர் - **கவிதா தண்டபாணி, ராஜராஜேஸ்வரி**
23. திருப்பூர் - **மாலதி நாகராஜ், கயல்விழி செல்வராஜ், சத்யா பழனிக்குமார், உமா மகேஷ்வரி,**
24. திருவண்ணாமலை - **T.R. காயத்ரி**
25. பெரம்பலூர் - **மகாதேவி ஜெயபால்**
26. புதுக்கோட்டை - **கலைமணி பாரதி, தெய்வானை, உஷா ராணி**
27. மயிலாடுதுறை - **தீன்ஷா**
28. விருதுநகர் - **வழக்கறிஞர் ஸ்ரீநிதி,**
29. விழுப்புரம் - **தேன்மொழி, பெனாசீர்**
30. வேலூர் - **டாக்டர் மாலதி**
31. தென்காசி - **சாஷா, திவ்யா மணிகண்டன்**
32. தர்மபுரி - **ரோஜா**
33. திண்டுக்கல் - **கிருத்திகா தங்கபாண்டி, லக்ஷிகா வேலுமணி, சித்ரா**
34. திருநெல்வேலி - **முத்துசெல்வி, ரஹீமா**
35. திருவள்ளூர் - **டாக்டர் கிருத்திகா**
36. நாமக்கல் - **டாக்டர் கோகிலாமணி**
37. நீலகிரி - **வைஷ்ணவி** ஆகியோர் தலைமையேற்று கண்டன உரையாற்றினர்.

செயலற்ற 'டம்மி' முதல்வர் ஆட்சியைக் கண்டித்து தமிழகம் முழுவதும் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. மகளிர் அணியினர் லட்சக்கணக்கில் திரண்டு கண்டன முழக்கமிட்டனர்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; "பேராசிரியர் கலையரசனை உள்ளூர் போலீசார் தவறுதலா கைது பண்ணிட்டாங்க. அதுக்காக நாங்க அவரிடம் மன்னிப்பு கேட்டுட்டோம்"ன்னு ஒரு அமைச்சர் சொல்லி இருக்காரே! தெரியுமா?

**பட்டணம் : ஆமாமய்யா; 'திராவிட மாடல்'ன்னு ஆங்கிலத்திலே ஒரு புத்தகம் எழுதி இருக்கார் அவர். அதுதான் இவங்க கண்ணை உறுத்தி இருக்கு. 'நீ அடிப்பது போல அடி; நான் அழுவதுபோல அழற?';ன்னு சொல்ற பழமொழிதான் ஞாபகத்துக்கு வருது. இப்படியும் ஒரு கவர்ன்மெண்ட்.**

### 'கரப்ஷன்' குமார் நிர்வாகத்தில் சீரழியும் சிறைத்துறை!

# கோவை சிறையிலிருந்தும் கைதி தப்பி ஓட்டம்!

## சுதந்திரமாக திரியும் குற்றவாளிகள்!

கோவை, நவ. 1-

கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூர் காவல் நிலையத்தில் திருட்டு உள்ளிட்ட வழக்கில் கைது செய்யப்பட்டவர் ராகவன். இவரை போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி விட்டு கோவை சிறையில் அடைக்க அழைத்து வரப்பட்ட போது சிறை வளாகத்தில் இருந்து தப்பி ஓடியுள்ளார். கோவை மத்திய சிறையின் முதல் நுழைவு வாயிலில் இருந்து 2வது நுழைவு வாயிலுக்கு அழைத்துவந்தபோது, அவரது கையில் போடப்பட்டிருந்த விலங்கினை போலீசார் அகற்றினர். அந்த நேரத்தில் திடீரென ராகவன் அங்கிருந்து தப்பிச்சென்றார். தப்பியோடிய கைதி ராகவனை விரைவாக பிடிக்கும் முயற்சியில் ரேஸ்கோர்ஸ் போலீசார் ஈடுபட்டு வருகின்றனர். இந்த சம்பவம் கோவையில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.




தேனி மாவட்டம் தேக்கம்பட்டியில் உள்ள மாவட்ட சிறையில் கடந்த 26ந்தேதி சிறைக் காவலர்களை தாக்கிவிட்டு 17 கைதிகள் தப்பி ஓடினர். போலீசாரின் நீண்ட தேடுதல் வேட்டைக்கு பிறகு அவர்கள் அனைவரும் பிடிபட்டனர். இந்த சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. கைதிகள் தப்பி ஓடிய சம்பவம் எதிரொலியாக சிறைக் காவலர்கள் 9 பேர் அதிரடியாக பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். அதன் தொடர்ச்சி யாக சிறைத்துறை டி.ஜி.பி. சந்தீப் ராய் ரத்தோர் மாற்றப்பட்டார்.

அன்னூர் காவல் நிலையக் காவலர்களால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட இராகவன் அப்போதே காவலர்களின் பிடியில் இருந்து தப்பி ஓடியுள்ளார். அவரை காவல்துறையினர் துரத்திப் பிடித்து தான் நீதி மன்றத்தில் நேர் நிறுத்தியுள்ளனர். இதைக் கவனத்தில் கொண்டு கோவை சிறை வளாகத்தில் கைதி இராகவனை பாதுகாப்புடன் கையாண்டிருக்க வேண்டும். சிறைக்காவலர்கள் அலட்சியமாக நடந்து கொண்டதே இதற்கு காரணம் ஆகும்.



அண்ணாநகர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மறைந்த மிசா சோ.மா.இராமச்சந்திரன் அவர்களின் உடல் மீது கழக இளைஞர் அணிச் செயலாளர் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர்மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

### திட்டமிட்டு Fake ID உருவாக்கி அதனடிப்படையில் அதிகாலை 5 மணிக்கு – பொருளாதார நிபுணர்

# கலையரசனை கைது செய்து அச்சுறுத்துவதுதான் தூய ஆட்சியின் லட்சணமா?

## சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

நெல்லை, நவ. 1-

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது சமூக வலைதளத்தில் கூறியிருப்பதாவது:-

இந்தியாவில் அரிசி, கோதுமை போன்ற உணவுப் பொருட்களின் விலை மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் இரண்டு மடங்கு அதிக விலையில் விற்கப்படுவதாகச் சொன்ன பொருளாதார நிபுணர் "பேராசிரியர் கலையரசன்" பெயரில் திட்டமிட்டு fake id உருவாக்கி தவறான பதிவு செய்து அதனடிப்படையில் அதிகாலை ஐந்து மணிக்கு கைது செய்து அச்சுறுத்துவது தான் தூயஆட்சியின் லட்சணமா CM Sir?



பேராசிரியர் கலையரசன் கைதை கண்டித்து அரசியல் தலைவர்கள், பொதுநிலையினர், பத்திரிக்கை, தொலைக்காட்சி, சோசியல் மீடியாக்களின் கடுமையான கண்டனத்திற்கு அடிபணிந்து பேராசிரியர் கலையரசனை அழைத்து "sorry" கேட்கும் முதல்வரே!, திட்டமிட்டு fake id உருவாக்கி காவல்துறையைக் கைக்கூலியாக ஏவிவிட்ட கொடூரக் குற்றவாளி மீதும்,

கைது செய்த காவலர்கள் மீதும் வழக்குப் பதிவு செய்து சட்டத்தின் முன் நிறுத்தி, நீதி வழங்க தயங்குவது ஏன் CM Sir.?

உங்கள் ஆட்சியின் அவலத்தை சுட்டிக்காட்டு கின்றவர்களை அடக்கி ஒடுக்கி அச்சுறுத்துவதில் காட்டும் வேகத்தை உங்கள் கட்சி நிர்வாகிகள் கஞ்சா, மெத்தம் பெட்டமைன், போதை வஸ்துகளை தயாரித்து தங்கு தடையின்றி தமிழக மாணவ சமுதாயத்திற்கு விற்பனை செய்து கொள்ளையடிப்பதை தடுத்து நிறுத்தத் துப்பில்லாமல் செயல்படும் காவல்துறைக்கு பொறுப்பு வகிக்க உங்களுக்கு வெட்கமாக இல்லையா CM Sir.?

இவ்வாறு அவர் தனது சமூக வலைதளத்தில் கூறியுள்ளார்.

### அண்ணாநகர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

# மிசா சோ.மா.இராமச்சந்திரன் மறைவு!

## சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் – தயாநிதி மாறன் – நே.சிற்றரசு – கலாநிதி வீராசாமி – எம்.கே.மோகன் அஞ்சலி செலுத்தினர்!

சென்னை, நவ. 1 -

அண்ணா நகர் தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், தலைமை செயற்குழு உறுப்பினரும், ஒருங்கிணைந்த அண்ணா நகர் பகுதியின் 25 ஆண்டு கால பகுதிக் கழகச் செயலாளரும், கழகத்தின் மூத்த முன்னோடி மிசா சோ.மா.இராமச் சந்திரன் (வயது 100) நேற்று முன்தினம் (30.10.2026 - வெள்ளிக் கிழமை) மதியம் 1.30 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்ததும் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க் கட்சி தலைவரும், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, அண்ணா நகர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.மோகன், அண்ணாநகர் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், அண்ணாநகர் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் ந.இராமலிங்கம், வட்டக் கழக செயலாளர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு அன்னாரின் உடலுக்கு மலர் வைத்து அஞ்சலி செலுத்தினர்.



மறைந்த மிசா சோ.மா.இராமச் சந்திரன் அவர்களுக்கு ஒரு மகள் உள்ளார்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (31.10.2026 - சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு அரும்பாக்கம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.